## **IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 169/2002**

Deposition of **D.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 04.03.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : அழகுவேல் Father's Name : துரைசாமி

துவக்க நேரம்: 05.03 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) கடந்த 1948 மற்றும் 1932 ஆகிய ஆவணங்களில் உள்ள சொத்துக்களை வாங்கியது எனது தாத்தா முத்துஉடையார் என்றால் சரிதான். முத்துஉடையாருக்கு எனது அப்பாவும் ஒரு வாரிசு என்றால் சரிதான். எனது அப்பாவுடன் உடன்பிறந்தவர்கள் 4 பேர் என்றாலும் எனது அப்பாவை சேர்த்து மொத்தம் 5 பேர் முத்துஉடையாருக்கு வாரிசு என்றாலும் சரிதான். எனது தாயார் பெயர் என்னவென்றால் பாஞ்சாலை அம்மாள்.

2) துரைசாமி உடையாருக்கும், பாஞ்சாலை அம்மாளுக்கும் மொத்தம் எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 4 பேர் ஆவோம். இதில் நான், எனது சகோதரிகள் கூத்தாயி, ஜெயலட்சுமி, தாமரைச்செல்வி ஆவோம். எங்களது குடும்பத்திற்கு விவசாய நிலம் 4-5 ஏக்கர் இருக்குமா என்றால் இருக்கும். இந்த 4-5 ஏக்கர் நிலங்கள் எனது தாத்தா மூலம் வந்த சொத்தினை விற்றுவிட்டு அதன் வருமானத்தை கொண்டு எனது தகப்பனார் தற்பொழுது என்னிடம் இருக்கும் சொத்துக்களை வாங்கினார் என்றால் சரிதான்.

3) கிழக்கு ராஜாபாளையம் கிராமத்தில் தற்பொழுது எங்களுக்கு வீடு உள்ளதா என்றால் இல்லை. கிழக்கு ராஜாபாளையம் கிராமத்தில் தெற்கு பகுதியில்

தோட்டத்திலேயே வீடு கட்டி அங்கேயே குடியிருந்து விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். தற்பொழுது நான் அனுபவித்து வரும் விவசாய நிலம் மற்றும் சித்ரா அம்மாவிற்கு கிரயம் கொடுத்த சொத்து ஆகியவை பரம்பரை சொத்து என்றால் எனது தாத்தாவின் சொத்தை, எனது அப்பாவிற்கு விற்றுவிட்டு அந்த வருமானத்திலிருந்து தற்பொழுது நான் வைத்திருக்கும் சொத்துக்களை வாங்கினார். பரம்பரை சொத்தில்தான் சித்ராவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

4) பரம்பரை சொத்தில், எனது மூன்று சகோதரிகளுக்கும் எந்த சொத்தும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் அதற்குண்டான மதிப்பை பணமாக நான் கொடுத்துள்ளேன். எனது தகப்பனார் இறந்தபிறகு, நானும், எனது மூன்று சகோதரிகளும் சேர்ந்து எங்களுக்குள் கடந்த 2018ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான்.

5) கடந்த 1999ம் வருடம் சித்ரா அம்மாவிற்கு, நாங்கள் சொத்தை விற்கும்பொழுது எனக்கும், எனது சகோதரிகளுக்கும் இடையில் எவ்வித பாகப்பிரிவினையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். சித்ரா அம்மாவிற்கு சொத்தை விற்கும்பொழுது, எனது அப்பா துரைசாமி உடையாரும், நானும்தான் சொத்தை விற்றுள்ளோம் என்றால் சரிதான். Ex.B9 பத்திரத்தில், எனது மூன்று சகோதரிகளும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான்.

6) எங்களது குடும்பத்திற்குள், இனிமேல் எந்தவித பிரச்சனையும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் தற்பொழுது 2018ல் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் ஆமாம். தற்பொழுது சொத்து கொடுக்கவில்லை என்றாலும், பெயரளவிற்கு பணம் மட்டும் ஏதோ கொடுத்துவிட்டு பாகப்பத்திரம் மூலம் சொத்து முழுவதையும் நானே எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல, சொத்துக்கள் முழுவதையும் என் பெயருக்கு எழுதியது உண்மைதான், ஆனால் எனது சகோதரிகளின் சொத்து மதிப்பிற்கு ஏற்ப அவர்களுக்கு தலா 5 இலட்சம் பணம் கொடுத்துவிட்டேன்.

7) கடந்த 2018 பாகப்பிரிவினை பத்திரத்தில் நான், எனது சகோதரிகளுக்கு தலா 5 இலட்சம் பணம் கொடுத்ததாக குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். நாங்கள் தற்பொழுது செய்த பாகப்பிரிவினை பத்திரத்தில், சித்ராவிற்கு சொத்து விற்றபொழுது அதற்குண்டான விகிதாச்சார தொகையை எனது சகோதரிகளுக்கு கொடுத்ததாகவும், அவர்கள் பெற்றுக்கொண்டதாகவும் நான் எனது பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டு எழுதியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் சித்ராவிற்கு சொத்து விற்றபோது இருந்த சொத்தின் மதிப்பீடும், தற்பொழுது 2018ல் பாகம் ஏற்படுத்தப்பட்டபோது இருந்த சொத்தின் மதிப்பீடும் கணக்கீடு செய்யப்பட்டு மூன்று சகோதரிகளுக்கு உண்டான பங்கீட்டை நான் பணமாக கொடுத்துவிட்டேன்.

8) கடந்த 1989 சட்டம் 1/1990ன் படி நானும், எனது அப்பாவும், சித்ராவுக்கு கிரயம் கொடுத்த கடந்த 1999ம் ஆண்டில் நாங்கள் விற்ற சொத்தில் (Ex.B9) எனது மூன்று சகோதரிகளுக்கும் சட்டப்படியான சரிவிகித பாகம் உள்ளது என்றாலும், அதனை மீறி நாங்கள் சித்ராவிற்கு கிரயம் கொடுத்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும், இந்த சித்ராவிற்கு விற்ற சொத்தில் 2/5 பாகம் மட்டும் செல்லத்தக்கது என்றாலும், மீதியுள்ள 3/5 பாகம் பொறுத்து செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

9) கடந்த 1999ல் நானும், எனது அப்பாவும், சித்ராவிற்கு கிரயம் கொடுக்கும்பொழுது பொய்யான சொத்து விவரத்தை குறிப்பிட்டு கிரயபத்திரத்தை எழுதியதால், எனது சகோதரிகள் மூவரும் அந்த கிரய பத்திரத்தில் கையெழுத்துதிட மறுத்துவிட்டார்கள் என்றாலும் சரியல்ல.

10) தற்பொழுது 2018ம் ஆண்டு நானும், எனது சகோதரிகளும் பாகம் பிரித்துக்கொண்டுள்ள நிலையில், சித்ராவிற்கு கொடுத்த சொத்தை பொறுத்து எனது மூன்று சகோதரிகளும் சித்ராவிற்கு ஏதேனும் சம்மதப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை, வாய்மொழியாக சித்ராவிடம் சொல்லிவிட்டார்கள்.

11) எனது தாத்தா கடந்த 1932, 1948 ஆகிய இரு ஆவணங்களில் பெற்ற கிரய பத்திரத்தில் உள்ள சொத்துக்களுக்கும் மிகையாக சித்ரா என்பவருக்கு நாங்கள் கிரயம் செய்து கொடுத்துள்ளோம் என்றாலும், சித்ராவிற்கு மிகையாக கொடுக்கப்பட்ட சொத்து, வாதி கதிர்வேலுக்கு பாத்தியப்பட்ட உரிமையுள்ள சொத்து என்றாலும், கதிர்வேலின் சொத்தை அபகரிக்கவேண்டியே சித்ராவிற்கு நாங்கள் கிரயம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

12) எனது சகோதரிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தைப்பொறுத்து எனது சகோதரிகள், சித்ராவிடம் வாய் மூலமாக சொன்னதாக சொல்வது சட்டப்படி செல்லுமா என்றால் செல்லாதுதான். அதனால் கிரய ஆவணம் (Ex.B9)ல் கண்டுள்ள சொத்து பரிமாற்றம் செல்லத்தக்கதல்ல என்றாலும், இதன் அடிப்படையில் சித்ரா என்பவர் முழுஉரிமை கோர முடியாது என்றாலும் சரியல்ல. இந்த கிரயப்பத்திரமே செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

13) கடந்த 1999 ம் வருடத்தில் நான், சித்ராவிற்கு சொத்தை விற்கும்பொழுது, ஒரு சதுரஅடி எவ்வளவு மதிப்பு இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை, வீட்டை மொத்தமாக ரூ.27,000/-ற்கு விற்றுவிட்டோம். நான், சித்ராவிற்கு விற்பனை செய்த சொத்தின் மதிப்பு கடந்த 1999 ல் ரூ.29,843/- என்று சந்தை மதிப்பு உள்ளது, ஆனால் அதனையும் குறைத்து நான் ரூ.27,000/- ற்கு கிரயம் கொடுத்ததாக இந்த ஆவணத்தில் குறிப்பிட்டிருப்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை என்றால் அன்றைய சந்தை மதிப்பு எனக்கு தெரியவில்லை. அன்றைய சந்தை மதிப்பு எனக்கு தெரியும் என்றாலும், அரசாங்கத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் சந்தை மதிப்பையும் மீறி சந்தை மதிப்பிற்கு குறைவாக, சித்ராவிடம் பல இலட்ச ரூபாயை பெற்றுக்கொண்டு, ரூ.27,000/-த்தை மட்டும் பெற்றுக்கொண்டதாக ஆவணத்தில் முரணாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

14) நான், சித்ராவிற்கு விற்பனை செய்தபொழுது அந்த இடம் என்னவாக இருந்தது என்றால் அந்த இடம் ஓட்டுவீடாகவும், சிதிலம் அடைந்த நிலையிலும், குடியிருக்க முடியாத சூழ்நிலையிலும் இருந்தது. நான், சித்ராவிற்கு கிரயம் கொடுத்த ஆவணத்தில் அந்த இடத்தில் ஓட்டு வீடு சிதிலம் அடைந்த நிலையில் இருந்ததாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை, காலி மனை என்றுதான் எழுதினோம். இந்த பத்திரத்தில் பொய்யான வாசங்களை எழுதிவிட்டு, மீண்டும் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஆவணங்களை பரிசீலிக்கவேண்டி வாதி தரப்பில் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம் 06.00 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal District Munsif, Attur.